# கலைஞரின் தத்துவப் போராட்டங்கள்!




உலக அளவில் பல அரசியல் தலைவர்கள் எழுத்தாளர்களாகவோ கவிஞர்களாகவோ இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஒன்றிரண்டு நூல்கள்கூட வெளிவந்திருப்பது ஆச்சரியமல்ல. ஆனால் வெகுசில தலைவர்களே தங்களுடைய ஒட்டுமொத்த அரசியல் வாழ்விலும் எழுத்தை ஒரு பிரதான ஆயுதமாக கைக்கொண்டிருக்கிறார்கள். அப்படி தன் எழுத்து களின் வழியே தனது தத்துவங்களையும் சிந்தனைகளையும் தொடர்ந்து முன்வைத்து ஒரு பெரும் இயக்கத்தைக் கட்டி எழுப்பியது மட்டுமல்ல, ஒட்டுமொத்த சமூகத்தோடும் பெரும் உரையாடல்களை வாழ்நாளெல்லாம் நிகழ்த்தியவர்களென்றால் உலக அளவில் ரஷ்ய புரட்சியின் தந்தை லெனின் போன்ற வெகுசிலரையே குறிப்பிட முடியும். இந்தியாவில் காந்தியடிகளும் அண்ணல் அம்பேத்கரும் அப்படி அரசியல் செயல்பாடுகளினூடே பெருமளவு எழுத்துப் பிரதிகளை உருவாக்கியவர்கள். தமிழ்நாட்டில் தந்தை பெரியாரின் பேச்சுகளும் எழுத்துகளும் பல தொகுதிகளாக வெளிவந்தன. அந்த வரிசையில் ஒரு அரசியல் தலைவராகவும் ஆட்சித் தலைவராகவும் கலைஞர் எழுதிக்குவித்த பல லட்சம் பக்கங்கள், அவரது அரசியல் போராட்டங்களுக்கும் தத்துவப் போராட்டங்களுக்கும் சாட்சியங்களாகத் திகழ்கின்றன.

கலைஞரின் அரசியல் அறிக்கைகள், உடன்பிறப்புக்கு எழுதிய கடிதங்கள், மேடைப் பேச்சுகள், சட்டமன்ற உரைகள், பேட்டிகள், முரசொலி தலையங்கங்கள் என அனைத்தும் கால வரிசையில் தொகுக்கப்பட்டு இன்று பார்வைக்குக் கிடைக்கின்றன. இவற்றை முறையாக ஆய்வு செய்யும் எவருக்கும் கலைஞர் ஒரு அரசியல் தலைவர் மட்டுமல்ல, ஒரு சித்தாந்த தலைவரும்கூட என்பது தெட்டத்தெளிவாகத் தெரியும். சமூக நீதி, மாநில சுயாட்சி, நில சீர்திருத்தம், சமூக நலத்திட்டங்கள், சமூக சீர்திருத்தம், தொழில் வளர்ச்சி, தமிழ் அடையாளம், பண்பாட்டுப் போராட்டங்கள், பாலின சமத்துவம் என ஒவ்வொன்று குறித்தும் கலைஞரினுடைய நிலைப்பாடுகளை மிகத் துல்லியமாக இந்த எழுத்துகளிலும் பேச்சிலும் காணலாம். அவை உடனடி அரசியல் எதிர்வினைகள் மட்டுமல்ல, கடந்த கால வரலாற்றிலிருந்தும் எதிர்காலத் தொலைநோக்கிலிருந்தும் அவர் ஒவ்வொன்றையும் அணுகுகிறார். ஒரு பிரச்சினையின் வெவ்வேறு பரிமாணங்களை கலைஞருடைய கண்கள் கூர்ந்து நோக்குகின்றன. கலைஞரின் எழுத்துகளில் நான் இரண்டு அம்சங்களை தொடர்ந்து காண்கிறேன். ஒருபோதும் அடிப்படைக் கொள்கைகளை விட்டுக் கொடுக்காத உறுதிப்பாடும் அதற்கான இடையறாத போராட்டமும், இன்னொருபுறம் காலத்தின் தேவைகளுக்கும் சந்தர்ப்பங்களின் நெருக்கடிகளுக்கு மேற்ப சில விட்டுக்கொடுத்தல்களும்.

இதில் சிலர் முரண்பாட்டைக் காணலாம். ஆனால் அரசியல் என்பதும் அதிகாரம் என்பதும் ஒரு நேர்கோட்டுப் பாதையல்ல. அது வளைவுகளும் செங்குத்தான மலையேற்றங்களும் பள்ளத் தாக்குகளும் நிறைந்த ஒரு பயணம். ஒரு கட்சியையும் ஆட்சியையும் காலத்திற்கேற்ப பாதுகாத்தால் மட்டுமே தான் ஏற்றுக்கொண்ட சமுதாயக் கடமைகளுக்கும் லட்சியங்களுக்கும் பங்காற்ற முடியும் என்பதில் கலைஞர் தெளிவாக இருந்தார். நடைமுறையில்அந்தலட்சியங்கள்நிறைவேற்றப்படுவதற்கு என்ன உத்திகள் தேவையோ அதைப் பயன்படுத்தினார். உலக வரலாற்றில் பல அரசியல் இயக்கத் தலைவர்கள் காலத்திற்கேற்ப செய்துகொள்ள வேண்டிய இந்த வளைந்துகொடுக்கும் தன்மை இல்லாததால் தங்கள் அரசியலையும் அரசியல் இயக்கத்தையும் இழந்திருக்கின்றனர் என்பதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. கொள்கையில் அசையாத இரும்பின் உறுதி, செயலில் வளைந்து கொடுக்கும் உடையாத பச்சை மூங்கிலின் தன்மை. இந்த இரண்டையும் கலைஞர் எப்படி ஒருசேரக் கையாண்டார் என்பதைப் பல்வேறு பிரச்சினைகள் குறித்த அவரது எழுத்துகளில் காணலாம்.

கலைஞர், அவரது மிக இளம்வயதுக் காலம் தொட்டு பேச்சையும் எழுத்தையும் தனது முதன்மையான அரசியல் கருவியாகக் கையாண்டார். அவரது இளமைக்கால எழுத்துகளில் அன்றைய காங்கிரஸ் அரசின் மாநில உரிமைகளுக்கு எதிரான போக்குகள் குறித்தும் எதேச்சாதிகாரப் போக்குகளுக்கெதிரான மிகக் கூர்மையான பார்வைகள் வெளிப்பட்டன. அதேசமயத்தில் இடதுசாரிகளோடு தீவிரமான தத்துவார்த்தப் போராட்டங்களை நடத்தினார். வர்க்கப் போராட்டம் மட்டுமே சமுதாய ஏற்றத் தாழ்வுகளுக்கான தீர்வு என்ற இடதுசாரிப் பார்வையைக் கடந்து வர்க்கத்தோடு சாதிய ஏற்றத் தாழ்வுகளும் ஒழிக்கப்பட்டால்தான் உண்மையான சமத்துவம் வளரும் என்பதில் கலைஞர் தெளிவாக இருந்தார். கலைஞர் காங்கிரஸோடும் இடதுசாரிகளோடும் அன்று நடத்திய தத்துவப் போராட்டங்கள் பெரியார் மற்றும் அண்ணா வழியில் திராவிடச் சித்தாந்தத்தின் வலுவான அடித்தளத்தை உருவாக்கின. பிற்காலத்தில் கலைஞரின் இந்தப் பார்வைகளே அவரது ஆட்சித் தத்துவமாகவும் மாறியது. ஒட்டுமொத்த தமிழ்நாடு அரசியலும் அந்தப் புள்ளிக்குப் பிற்காலத்தில் வந்து சேர்ந்தன.

கலைஞர் தன் எழுத்துகளை அரசியல் பிரகடனங்களுக்கான நேரடிக் கருவியாக மட்டும் பயன்படுத்தவில்லை. தனது சமுதாய நோக்கை வெளிப்படுத்த அவர் எல்லா ஊடகங்களையும் கலை வடிவங்களையும் பயன்படுத்தினார். அவர் நாடகங்களை எழுதினார். அவரே அதில் நடிக்கவும் செய்தார். பத்திரிகை நடத்தினார். அவரே அதில் எழுதவும் செய்தார். அந்தந்தக் காலகட்டத்தின் அரசியல் பிரச்சினைகளை, சமுதாயப் பிரச்சினைகளை தனது திரைப்பட வசனங்களில் வெகு கூர்மையாகப் பயன் படுத்தினார். அரசியல் கருத்துகள், அரசியல் மேடைகளில் சொல்லப்படும்போது நேரடியாக அந்த அரசியலைக் கவனிப்பவர்களை மட்டுமே போய்ச்சேரும். மாறாக ஒரு கலைவடிவத்தில் அதைச் சொல்லுகிறபோது அரசியலில் நேரடியாக ஈடுபாடு அற்றவர்களிடமும் அந்தக் கருத்துகள் ஆழமாகச் சென்றடையும் என்பதை கலைஞர் புரிந்து கொண்டிருந்தார். அப்படித்தான் அவரது அரசியல் சிந்தனைகள் தமிழ்நாட்டின் கடைக்கோடி மனிதன்வரை சென்றடைந்தன. அவரது வசனங்கள் தமிழ்ப் பேச்சு வழக்கின் ஒரு பகுதியாகவே மாறின என்று சொல்லலாம். கதைகளாகவும் கவிதைகளாகவும் கட்டுரைகளாகவும் அரசியல் அறிக்கைகளாகவும் கலைஞர் தொடர்ச்சியாக தமிழ் மனங்களின்மேல் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார்.



**கவிஞர் மனுஷ்ய புத்திரன்**

கலைஞருடைய சமூகநீதி அரசியல் பெரும் வெற்றி பெற்றதற்குக் காரணம் அவர் அதை தமிழ்ப் பண்பாட்டு அரசியலோடு வெற்றிகரமாக இணைத்ததுதான். சாதிகளாகவும் வர்க்கங்களாகவும் கிராமம், நகரம் எனவும்; படித்தவர் படிக்காதவர் எனவும் பிளவுண்டு கிடந்த தமிழ்ச் சமூகத்தை ஒரு ஒற்றைப் புள்ளியில் இணைத்தால் மட்டுமே சமூக நீதி அரசியலையும் அதற்கான அதிகாரத்தையும் கொண்டுசெலுத்த முடியும் என்பதைப் புரிந்துகொண்ட கலைஞர் தமிழ் அடையாள அரசியலை தன் எழுத்துகளில் முதன்மைப்படுத்தினார். தமிழ்ப் பண்பாட்டு மரபின் வலிமையான கூறுகளை அவர் தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றார். அய்யன் திருவள்ளுவரையும் கண்ணகியையும் தமிழ் இலக்கியத்தின் தமிழ்ப் பண்பாட்டின் அடையாளங்களாகக் கட்டி எழுப்பினார். இந்த இரண்டு திருவுருக்களுமே தமிழ்ச் சமூகத்தின் ஆதாரமான மையப்புள்ளிகள் என்பதை கலைஞர் வெற்றிகரமாக நிறுவினார். ஆட்சித் திறனில் ராஜராஜ சோழன், தமிழ் அடையாளத்தின் மற்றொரு பகுதியாக மாற்றப்பட்டார். தமிழ்நாட்டின் மதரீதியான பிம்பங்களும் குறியீடுகளும் பின்னுக்குத் தள்ளப்பட்டு கலைஞர் உருவாக்கிய தமிழ்ப் பண்பாட்டு அடையாளங்கள் முன்னிலை பெற்றன. பல்வேறு பண்பாட்டு அடையாளங்களை தனதாக்கிக்கொள்ளும் இந்துத்துவா பேரினவாதத்தால் இன்று வரை அய்யன் திருவள்ளு வரையும் கண்ணகியையும் ராஜராஜ சோழனையும் எவ்வளவோ முயற்சி செய்தும் தனதாக்கிக்கொள்ள முடியவில்லை என்றால் அதற்கு முதன்மையான காரணம் அந்த அடையாளங்களை திராவிட அடையாளங்களாக உறுதியான தமிழ் அடையாளங்களாக கலைஞர் நிறுவியதுதான்.

இவை எல்லாவற்றையும் தீர்மானித்தது உறுதியான தெட்டத்தெளிவான கலைஞரின் தத்துவப் போக்குகள்தான். அவர் ஒருபோதும் பழமை வாதத்தோடும் மதவாதத்தோடும் சமரசம் செய்துகொண்டதில்லை. மாநில உரிமைகளுக்கான போராட்டத்தை எந்த நிலையிலும் விட்டுக்கொடுத்ததில்லை. தேசிய அரசியலில் அவர் முதன்மையான பங்கு வகித்த காலத்தில்கூட மாநில அரசியலை அவர் விட்டுத்தந்ததில்லை.

கலைஞர் தனது எல்லா முடிவுகளையும் ஆவணப்படுத்தியிருக்கிறார். அதற்கு விளக்கமளித்திருக்கிறார். ஒரு எழுத்தாளர், ஒரு சிந்தனையாளர், ஒரு மாபெரும் இயக்கத்தின் தலைவர், ஒரு மாநில முதலமைச்சர், மன உறுதி குன்றாத போராளி என அத்தனை பரிமாணங்களிலும் கலைஞர் எப்படி நிகரற்ற ஒருவராக தன்னைக் கட்டமைத்துக்கொண்டார் என்பதற்கு அவர் விட்டுச் சென்றிருக்கும் எண்ணற்ற பக்கங்கள் சாட்சியங்களாக இருக்கின்றன.

கலைஞரின் அரசியல் சரிதத்தை எழுத விரும்பும் எவரும் எதையும் எங்கும் தேடிச்செல்ல வேண்டியதில்லை. அவரே எல்லா சரித்திரச் சான்றுகளையும் விட்டுச் சென்றிருக்கிறார். ஒரு எழுத்தாளன் எழுத்தின் வழியே தன் காலத்தை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்பதற்கு மட்டுமல்ல, அதை எப்படி மாற்றியமைக்க வேண்டும் என்பதற்கும் கலைஞரின் எழுத்துகளும் அதன் வழியே அவர் நடத்திய தத்துவப் போராட்டங்களும் சாட்சியமாக நிற்கின்றன.

---



## இளைஞனின் கனவு!

நன்கு கற்றுத் தெளிந்து தேர்ந்து நாம் ஈடுபாடு கொண்ட துறையில் நடு நின்ற நாயகமாய் நாடு போற்றத் திகழ்வோம்; என்பதே ஒவ்வொரு இளைஞனும் காண வேண்டிய கனவு - அந்தக் கனவு காண்பதற்காக உறங்க வேண்டிய அவசியமில்லை

மாறாக; அந்தக் கனவு கண்டிட விழித்தெழுக! விழித்தெழுந்தால் மட்டுமே; கனவுகள் நிறைவேறும் எதைப் பற்றியும் கனவு காண்பது எளிது; அந்தக் கனவு, கடின உழைப்பின்றி நிறைவேறும் என்பது அரிது!

எனக்கு மிகவும் பிடித்த பொன்மொழிகளில் ஒன்று; “நீண்ட தூரம் ஓடினால்தான், அதிக உயரம் தாண்ட முடியும்” என்பதாகும்.

**- கலைஞர்**

---



## உடல்நலத் துறை!

நடைப்பயிற்சி மூலம் முக்கியமாக உடலின் எடையைக் குறைப்பது மூச்சுப் பயிற்சி மூலம் சுவாசப் பைகளை முறையாக இயங்கச் செய்வது - குருதியோட்டத்தைச் சீராக்கிக் கொள்வது - அதன் அடிப்படையில் இருதயத்துக்குப் பாதுகாப்பு உருவாக்குவது - யோகப் பயிற்சி மூலம் எலும்புகள், நரம்புகளுக்கு வலுவூட்டுவது - தியானப் பயிற்சி மூலம் மன அமைதி காண்பது; இவை போன்றவை வாழ்வுக்கு இன்றியமையாதவை என்பதை உணர்ந்து; எத்தனையோ துறைகள் பற்றிய நூல்களைப் படிக்கின்ற நாம்; உடல்நலத் துறை குறித்து விளக்கமளிக்கின்ற நூல்களையும் படிக்கின்ற ஆர்வத்தைப் பெறுதல் வேண்டும்.

**- கலைஞர்**

---

## பக்கத்தில் இருப்பதே பலவீனமா?



பக்கத்தில் இருந்து நமக்குப் பழக்கமானவர், பல்கலை அறிவாளியாக இருப்பினும், பக்கத்தில் இருக்கிறார் என்பதே பலவீனமாகிவிடுகிறது.

வானில் சிறகடிக்கும் வண்ணத்துப் பூச்சியைக் காண்பதில் காட்டும் ஆர்வம்; வண்ணச் சிறகுகளுடன் நம் வீட்டுக் கொல்லையில் நடைபோட்டுக் கொண்டிருக்கும் சேவலின் மீது செல்வதில்லை அல்லவா ?

இப்படியும் நம்மவர் திறனுக்கும் சிறப்புக்கும் நன்மதிப்பு குறைக்கப்படுகின்ற நிலை கண்டு நெஞ்சு பதைத்திடும் வேளையில்; அனுமதி இன்றி நுழையும் ‘அழுக்காறு’ எனும் பாவிக்கு இடம் அளிப்பது என்பது, ‘ கொள்ளை நோய்’க்கும் விருந்து வைப்பது போலத்தான் ஆகிவிடும்.

பிறர்க்கு வரும் நலமும், வளமும், புகழும், பாராட்டும், அனைத்தும் நமக்கு வந்ததாகக் கருதி மகிழ்வதே, அக் கொள்ளை நோய் நம் எல்லைப் பக்கமே எட்டிப் பார்க்க முடியாத தடுப்பு முறையாக அமையும்.

**- கலைஞர்**